19. நிராமியக்கண்ணியில் காணப்படும் தத்துவம், இன்ப, துன்பங்களை கட்டுரைக்க.

20. இறைவனை அடையும் நெறியை முதன்மைப்படுத்தி கிருட்டிணபிள்ளை பாடியுள்ளதை விவரிக்க.

---





(For candidates admitted from 2016–17 onwards)

## PULAVAR DEGREE EXAMINATION, NOVEMBER 2022.

Part III — புலவர் - தமிழ் — Major

சமய இலக்கியம்

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. காவிரிக் கரைத்தலங்களில் 11 ஆவது தலமாக விளங்குவது? எது?

2. அப்பர் இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட்ட நாள் எது?

3. தெள்ளேணம் என்பது என்ன?

4. ‘இலகு மெய்ந்நெறி சிவநெறி’ என உரைத்தவர் யார்?

5. சமய வாதத்தில் ஆழ்வார் வென்ற இடம் எது?

6. பெருமாள் திருமொழியில் இடம்பெற்றுள்ள பாசுரங்கள் எத்தனை?

7. சிக்கந்தர் மலையென அழைக்கப்பட்ட மலை எது?

8. மஸ்தான் சாகிபு சீடர்கள் சார்ந்த மதம் எது?

9. தண்டியலங்கார இலக்கண வழியில் தமிழ்மரபோடு எழுதப்பட்ட கிருத்துவ காப்பியம் எது?

10. இரட்சண்யாத்திரகம் என்பதன் பொருள் என்ன?

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தேனுண்ணும் வானளாவிய பொழில் சூழ்ந்த புகனூரைப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) "நன்மையைத்தரும் அழகிய திருவாரூர் இறைவனை மறத்தல் இயலுமோ" - விளக்குக.

12. (அ) திருவாரூரில் எழுந்தருளி இருக்கின்ற இறைவனின் பெருமைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'மணிமிடற்று அமுதே' எனச் சிவபெருமான் போற்றப்படுவதை விவரிக்க.

13. (அ) கண்ணனின் திருஅவதாரச் சிறப்பினை விளக்குக.

(அல்லது)



(ஆ) குலசேகராழ்வார் திருவேங்கடவனின் அடிகளை வணங்குவதை விளக்குக.

14. (அ) மஸ்தான் சாகிபு பாடல்களில் வெளிப்படும் துன்பங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) நிராமியக்கண்ணிகளில் காணப்படும் இறைவனின் தன்மையை எழுதுக.

15. (அ) 'சிலுவைக் குன்று' தந்த விடுதலையை விளக்குக.

(அல்லது)

(ஆ) மீட்சிப் பயணத்தில் வெற்றியின் முடிவு குறித்து எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. திருவெண்காடு கலத்திலுள்ள முக்குள நீர் பெருமைகளை விவரிக்க.

17. "திருவருள் விழையும் மருள்நீங்கித் தெருள் வேண்டும்" என்னும் பாடலில் வெளிப்படும் இறைவனின் சிறப்புகளைக் கட்டுரைக்க.

18. பெரியாழ்வாரின் பக்திச்சிறப்பினை திருப்பல்லாண்டு வழி நிறுவுக.